**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**MC No.02/2022 Date: 11-08-2023.**

**எ.ம.சா.1 – ஜெயகாந்தன், த/பெ.நடராஜன்,**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) 1ம் மனுதாரர் எனது மனைவி என்றும், 2ம் மனுதாரர் எனது மகன் என்றால் சரிதான். நான் பெங்களூரில் உள்ள கிரீன் விஷன் டெக்னாலஜி என்ற நிறுவனத்தில்வேலை பார்த்தபோது எனக்கு சம்பளம் என்ன என்றால் ரூ.20,000/- ஆகும். நான் இன்றுவரை மாதம் ரூ.75,000/- சம்பளம் வாங்கி வருகிறேன் என்றும், தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது மனுதாரருக்கு சீதனமாக எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண பத்திரிக்கையில் மனுதாரர் 8 பவுன் நகை போட்டுகொண்டு தான் வந்தார் என்று சொல்லிவிட்டு, தற்போது தெரியாது என்று சொல்கிறேன் என்றால் மனுதாரர் சொன்னதை வைத்து தான் சொன்னேன், நகைகளை நான் பார்க்கவில்லை.

2) நானும், எனது மனைவியும் எத்தனை காலம் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் அதிகபட்சமாக 1 வருடம் 6 மாதம் இருக்கும். திருமணத்தின்போது மனுதாரருக்கு 18 பவுன் நகை போட்டார்கள் என்றும், அந்த நகைகள் இன்றுவரை எனது வசம் தான் உள்ளது என்றும், வழக்கிற்காக அதிகப்பட்சமாக 1 வருடம் 6 மாதம் தான் சேர்ந்து வாழ்ந்திருப்போம் என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சேர்ந்து வாழ்ந்த காலத்தில் மனுதாரர் போட்டிருந்த நகைகளை நான் பார்த்ததில்லை என்று சொல்வது நம்பும்படியாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3) எனது பிரமாண பத்திரிக்கை மற்றும் எதிருரையில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு வளைகாப்பை அவரது பெற்றோரை அழைக்காமல் என் குடும்பத்தினரை வைத்து மட்டும் நடத்தினேன் என்றால் சரியல்ல, அவர்களை நான் அழைத்தேன் ஆனால் அவர்கள் வரவில்லை. ஆனால், அதன்பின்னரும் மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாருக்கு வளைகாப்பு நடத்தினார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மனுதாரரின் பெற்றோர்கள் நடத்திய வளைகாப்பிற்கு பிறகும் நானும், மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான்.

4) மனுதாரருக்கு அவர்கள் பெற்றோர்கள் நடத்திய வளைகாப்பை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நான் மனுதாரரையும், அவரது பெற்றோர்களையும் உதாசீனப்படுத்தினேன் என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர் கருவுற்றபோது எனக்கு ஒருவிபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த விபத்தில் நான்

குணமடையும்போது மனுதாரர் எனக்கு வேண்டிய தேவைகளை செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல, எனது பெற்றோர்கள் தான் என்னை கவனித்துகொண்டனர். மனுதாரர் தனது பிரசவித்திற்காக எத்தனையாவது மாதத்தில் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்றால் கருவுற்ற 8 ம் மாதத்தில் சென்றார்.

5) அனைத்து மருத்துவ செலவுகளையும் மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் தான் செய்தார்கள் என்றால் சரிதான். குழந்தை பிறந்தவுடன் மனுதாரரையும், குழந்தையையும் அவரது பெற்றோர்கள் தான் வீட்டிற்கு அழைத்து கொண்டு பார்த்து கொண்டார்கள் என்றால் சரிதான். 2 ம் மனுதாரர் எனக்கு பிறக்கவில்லை என கூறி 1 ம் மனுதாரரை ஏழனப்படுத்தினேன் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்து எத்தனையாவது மாதத்தில் எனது வீட்டிற்கு அழைத்து வந்தேன் என்றால் 2 ம் மாதத்தில் அழைத்து வந்தேன். அவ்வாறு அழைத்து வந்து 10 மாதங்கள் வரை இருவரும் என்னுடன் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல, 2 ம் மனுதாரரின் 8 ம் மாதம் வரைதான் இருந்தார்கள்.

6) 1 ம் மனுதாரர் என்னுடன் இருக்கும்போது அவரது பெற்றோர்களுடன் பேச விடாமலும், அவரது வீட்டிற்கு செல்ல விடாமலும் கொடுமைபடுத்தினேன் என்றால் சரியல்ல. எனக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரிதான், திருமணத்திற்கு பிறகு தான் இருந்தது. நான் சொல்வது தவறு என்றும், எனக்கு திருமணத்திற்கு முன்பாகவே குடிபழக்கம் அதிகளவில் இருந்தது என்றால் சரியல்ல. சேலம் SKM மருத்துவமனையில் அதிகப்படியான குடிப்பழக்கத்தினால் கணையம் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரிதான்.

7) சேலம் SKM மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மனுதாரர்கள் இருவரும் என்னை வந்து பார்த்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், சேலம் SKM மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மனுதாரர்கள் இருவரும் என்னை வந்து பார்த்தார்கள் என்றும், 1 ம் மனுதாரரின் பெற்றோர்களும் வந்து என்னை பார்த்து எனது மருத்துவ சிகிச்சைக்காக ரூ.50,000/- பணம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனது மனைவி என்னை பிரிந்து எத்தனை வருடங்களாக தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் 5 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

8) 1 ம் மனுதாரரிடம் விவாகரத்து வேண்டி சேலம் குடும்பல நல நீதிமன்றத்தில் HMOP 520/2017 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான், அவர் என்னுடன் சேர்ந்து வாழாததால் விவாகரத்து தர தாக்கல் செய்தேன். 1 ம் மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ்வதற்காக விவாகரத்து தாக்கல செய்வதற்கு முன்னரோ அல்லது பின்னரோ சட்ட ரீதியாக ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். என்ன வகையான நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் நீதிமன்றத்தின் மூலமாக அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன். அந்த நீதிமன்ற அறிவிப்பை எனது எதிருரை ,

பிரமாண பத்திரிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் மேற்சென்னவாறு நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9) பிரமாண பத்திரிக்கையில் எனது தரப்பு சாட்சியத்தை உறுதிப்படுத்த எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டி சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் HMOP No.114/2019ம் என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரிதான், உடல்நிலை சரியில்லாததால் ஆஜராகவில்லை. நான் எத்தனை நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன் என்றால் 7 மாத காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன். இதுநாள்வரை, நான் அந்த வழக்கில் ஆஜராகாமல் இருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

10) நான் 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லாத காரணத்தினால் தான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், சேர்ந்து வாழ 1ம் மனுதாரர் தாக்கல் செய்த வழக்கிலும் நான் ஆஜராகாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1ம் மனுதாரருடன் நான் சேர்ந்து வாழாமல் இருப்பதற்கு காரணமே கடந்த 07-07-2021ம் தேதி, கன்னந்தேரி பூவானூரில் உள்ள ஸ்ரீபாலமுருகன் கோவிலில் மீனா கிருஷ்ணா எ ன்ற பெண்ணை திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் தான் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ எந்த நடிவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11) 1ம் மனுதாரர் என்மீதும், மீனா கிருஷ்ணா மற்றும் மற்ற குடும்ப உறுப்பினர்கள் மீதும் இதே நீதிமன்றத்தில் விவாகரத்து ஆகாமல் வேறொரு திருமணத்தை செய்து கொண்டதாக குற்றம் சாட்டி CC No.73/2021 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்சொன்ன, குற்ற வழக்கில் நானும், மீனாகிருஷ்ணாவும் விடுவிப்பு மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

**(மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் நேரம் கேட்டதால் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Witness (Sd)-Jayakanthan

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.